சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 13.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **3/2026** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-2 |
| சாட்சியின் பெயர் | : | மாதவன் |
| தந்தை பெயர் | : | கருப்பையன் |
| கிராமம் | : | புலிவளம் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 50 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவர் ஆவேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா-1 எனது மகள் ஆவார். அ.சா-1 கல்லூரியில் படிக்கம் போது திருவாரூரில்

இருந்து நன்னிலத்திற்கு பேருந்தில் சென்று வருவார். அப்போது எதிரியுடன் பழகிவந்துள்ளார். இருவரும் காதலிப்பதாக ஊரில் பேசிக்கொண்டார்கள். நான் அதை கண்டித்தேன். ஒரு நாள் என் மகள் எதிரியுடன் திருமணம் செய்து கொள்ள போவதாக உறவினர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். இதை தெரிந்து நான் என் மகளை கேட்டபோது என் மகன் என்னிடம் இல்லை என தெரிவித்தார். எனது மகளின் தோழிகள் மூலமாக என் மகள் ஆஜர் எதிரியை திருமணம் செய்து கொள்ளப்போவதாக கிடைத்த தகவலை உறுதிப்படுத்திக்கொண்டேன். எனது உறவினர்களும் ஊர்காரர்களும் ஒன்று கூடி என் மகளை அழைத்துக்கொண்டு காவல் நிலையம் செல்லும் படி சொன்னார்கள். நானும் என் மகளை அழைத்துக்கொண்டு காவல் நிலையம் சென்றேன். என் உறவினர்கள் அழுத்தம் கொடுத்ததன் காரணமாக திருவாரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அ.சா-1யை அழைத்து சென்றேன். எங்களுடன் வந்திருந்த உறவினர் ஒருவர் எழுதிக்கொடுத்த புகாரில் அ.சா-1 கையொப்பம் செய்து காவல் நிலையத்தில் கொடுத்தார். பின்னர் போலீசார் இந்த வழக்கு தொடர்பாக விசாரணை செய்ய அ.சா-1ன் செல்போனை ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டார்கள். நான் என் மகளின் செல்போனை ஒப்படைத்தேன். அதில் என்ன விபரம் உள்ளது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் செல்போன் எனது மகளான அ.சா-1ன் செல்போன் ஆகும். அந்த செல்போன் **சா.பொ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி**

என்னை போலீசார் விசாரித்தபோது எதிரி எனது மகளான அ.சா-1யை காதலிப்பதாகவும், திருமணம் செய்து கொள்வதாகவும் கூறி பல முறை உடலுறவு வைத்துக்கொண்டதாகவும், பின்னிட்டு எங்களது சாதியின் பெயரை குறிப்பிட்டு சாதியை காரணமாக காட்டி திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டார் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேலும் நான் ஏன் என் மகளை திருமணம் செய்துகொள்ள எதிரியிடம் கேட்டபோது எதிரி தகாத வார்த்தைகளால் என்னை பேசி கொலை மிரட்டல் விடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் புகார் அளித்தப்பின்னர் அ.சா-1 எதிரியை திருமணம் செய்து கொண்டுள்ளார் என்று சொன்னால் ஆமாம். நான் காவல் நிலையம் சென்று போலீசார் விசாரணையின் போது சா.பொ-1 ஆன செல்போனை நான் காவல் நியைலத்தில் ஒரு பென்ட்ரைவையும் ஒப்படைத்தேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா-1 எதிரியும் திருமணம் செய்து கொண்டதால் எதிரியை காப்பாற்ற வேண்டி உண்மையான சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.13 18:23:37 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.